*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **24 டிசம்பர், 2025**

## கிறித்துமஸ் வாழ்த்துச் செய்தி

உலகம் முழுவதும் வாழும் கிறிஸ்துவர்களுக்கு குறிப்பாக, புதுச்சேரி மாநிலத்தில் வாழும் கிருஸ்துவ சகோதர-சகோதரிகள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பை, மனிதநேயத்தை, மன்னிப்பை- தன்னுடைய வாழ்வின் மூலமாக இந்த உலகத்திற்கு போதித்த இயேசு கிறித்துவின் பிறந்த நாளை கிறித்துமஸ் விழாவாக கொண்டாடுகிறோம். அவருடைய வாழ்க்கை- வரலாறாக மட்டும் அல்லாமல் நம்முடைய வாழ்க்கை நெறியாகவும் இருக்க வேண்டும்.

புதுச்சேரி மாநிலம், ஆன்மீக சிந்தனையோடு சமத்துவ, சகோதரத்துவ சிந்தனையை வளர்த்த பூமி. நம்முடைய பணபாட்டு ஒற்றுமைதான் பாரத நாட்டின் பலம். அதை நாம் என்றென்றும் மதித்து, வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க பங்களிப்போம்.

(K. கைலாஷ்நாதன்)